ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1974/14 - 2016 ජූලි මස 05 වැනි අඟහරුවාදා - 2016.07.05

1974/14ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குற்ப்பு இல.: வீஇ/ டிஎஸ்/ எல்எல்டி/ எல்ஏ/ ஐஆர்யுபிஏ/ 13
காணி அமைச்சின் இல.: 4-3/ 9/ 2015/ டபிள்யுஎஸ்/ 93

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை/ ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| ஆரம்ப வரை இல. | : யா/2841 |
| கிராமத்தின் பெயர் | : இருபாலை |
| கிராம அலுவலர் பிரிவு | : இருபாலை தெற்கு ஜே/257 |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வலிகாமம் கிழக்கு, கோப்பாய் |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வட மாகாணம் |

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: காட்டுவாசல், தாழையடி; விபரம்: ஒரு கிணறும் இரு தென்னை மரமும் கொண்ட காணி; உரிமையாளர் பெயர்: பீ. ஞானதாஸ்; விஸ்தீரணம்: 0.2339 ஹெக்.

மேற்குறித்த காணிக்கு/ ஆட்சி உரிமை எடுத்துக் கொள்ளவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ ஆட்சி உரிமையை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகள் பற்றிய விபரங் களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்கிறேன்.

ம.பிரதீபன்,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.

பிரதேச செயலகம்,
கோப்பாய்.
2016, யூலை 01.

7 - 844

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**திருத்தம்**
**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் (460 வது அத்தியாயம்)**

7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

1958/26 ஆம் இலக்கம் உடைய 2016.03.17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் தொடர்பு இலக்கம் மொ/ஆசங்/03/அத்/17 இன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 7 ஆவது பிரிவின் கீழான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காணி உரிமைகள் சமர்ப்பித்தல் மற்றும் சந்திக்க வேண்டிய தினமாக குறிப்பிடப்பட்டுள்ள 2016.03.10 திகதியானது 2016.07.22 திகதியாகவும் உரிமைகளுக்கான வேண்டுகோள் சமர்ப்பிக்க வேண்டிய தினம் 2016.07.29 ஆந் திகதியாவும் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரதேச செயலாளர்,
மொனராகலை.

பிரதேச செயலகம்,
மொனராகலை.
2016, யூன் 30

7 - 845